1987 ஏப்ரல் 22]

விடுதலைப் போராட்ட ஈடுபாடு காரணமாக தலைமறைவாக இருந்துள்ளவர்களுக்கு தியாகிகள் பென்ஷன்.

446—(* வினா எண் 4836) திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1947 ஆகஸ்டு 15-ம் தேதி வரை விடுதலை போராட்ட ஈடுபாடு காரணமாக தலைமறைவாக இருந்துள்ளவர்களையும் தியாகி பென்ஷன் பெறத் தகுதியுள்ளவர்களாக மாநில அரசு அறிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு இந்த அடிப்படையில் பென்ஷன் அனுமதிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தகுந்த ஆதாரங்களை அளிக்கும் விடுதலை போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியங்கள் வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப் படுகின்றன. இவ்வகை ஆணைகள் சிறை சென்றவர்களுக்கும், தலைமறைவாக சென்றவர்களுக்கும் தனித்தனியாக வெளியிடப் படுவதில்லை

திரு. கே. சுப்பராயன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு பென்ஷன் பெறுகிற தியாகிகளுக்கு மாநில அரசு பென்ஷன் வழங்க முயற்சிக்கிறபோது பல்வேறு ரெக்கார்டுகளைக் கேட்கிறார்கள். மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று அங்கீகரித்து பென்ஷன் கொடுக்கிற நிலையில், மாநில அரசு பென்ஷன் கொடுக்க தனியாக ரெக்கார்டு கேட்பது எந்த அடிப்படையில் நியாயமானது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே. அப்படி ஏதாவது தனிப்பட்ட முறையில் மாண்பமிகு உறுப்பினர் அவர்களிடம் தகவல் இருந்தால், சொல்லவேண்டும். மத்திய அரசு ஓய்வு ஊதியம் தருவதற்காக கேட்கிறபோதே, மாநில அரசுதான் அத்தனை ரெக்கார்டுகளையும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே அந்த அடிப்படையில்

ஏற்கனவே மாநில அரசுக்கு இது முறையாக தெரிந்திருக்கிற காரணத்தால் இதிலே பிரச்சனை இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே அப்படி இருந்தால், அதைப்பற்றி தனியாகச் சொல்லலாம்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மனு போட்டும் எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். அவிநாசிக்கு அருகிலே உள்ள கருவலூர் என்ற ஊரைச் சேர்ந்தவர் தெய்வசிகாமணி என்று சொல்கிற தியாகி, 13—5—1953-லே இறந்துவிட்டார்கள். அவருடைய மனைவி, தன்னுடைய கணவர் விடுதலைப் போராட்ட வீரர் என்ற முறையில் மனு போட்டு—1968-லே மனு போட்டு—இன்றைக்கு வரையிலும் அவர்களுக்கு வழங்கப்பட வில்லை. மரியாதைக்குரிய மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள்கூட அவர் விடுதலைப் போராட்ட வீரரின் மனைவி என்று எடுத்துச் சொல்லியும் கூட, சான்றிதழ் அளித்தும் கூட, இன்றைக்கு வரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது முதியோர் பென்ஷன் வாங்கி பிழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிற விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு, அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுத்து, நீதி கிடைக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் போல அது உண்மையான மனுவாக இருக்குமானால், நிச்சயமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். இருக்கிற சிக்கல் என்ன வென்றால், நாம் ஏற்கனவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இப்படி யாராவது பொது வாழ்விலே ஈடுபட்டு இருப்பவர்கள், முக்கியமானவர்கள் சான்றிதழ் கொடுத்தால் போதும், அதை வைத்துக்கொண்டு இந்த ஓய்வு ஊதியத்தைக் கொடுத்து விடலாம் என்று நாம் முடிவு எடுத்தபோது, கணக்கில் அடங்காத அளவிற்கு மனுக்கள் வந்த காரணத்தால், மீண்டும் அதற்கு ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காரணம் தவறானவர்களுக்கு கொடுத்து விடக்கூடாது என்பதற்காகத்தான். ஏன் என்றால், நியாயமாக

1987 ஏப்ரல் 22]

பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு மரியாதை இல்லாமல் போய்விடுமே என்பதற்காகத்தான் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படிக் கட்டுப்படுத்துகிற போது, யார் யார் உண்மையாக அந்தச் சான்றிதழ் வைத்திருக் கிறார்களோ, அவர்களுக்குத்தான் கொடுக்க முடியும், அப்படித் தான் கொடுக்கவேண்டும் என்ற முடிவை எடுத்தபோது, சரியான, முறையான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், அதிலே காலதாமதம் ஆகியிருக்கலாம். நீங்கள் அந்தக் கடிதத்தைத் தனியாக அனுப்பினால், உண்மையான நிலவரம் என்ன என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க ஏதுவாக இருக்கும்.

திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு தமிழகத்திலே பென்ஷன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இரண்டு விதமாக கொடுக்கப்படுகிறது. ஒரு சிலருக்கு 100 ரூபாயும், ஒருசிலருக்கு 250 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாநில அரசிலிருந்து மட்டும் பென்ஷன் பெறக்கூடியவர்களுக்கு 250 ரூபாய் கொடுக்கிறோம். மத்திய அரசிலிருந்து பென்ஷன் பெறக்கூடியவர்களுக்கு மாநில அரசு 100 ரூபாய் கொடுக்கிறது. எனவே, அங்கேயும் பெற்று, இங்கேயும் பெறுகிறபோது, 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசிலிருந்து கிடைக்காதவர்களுக்கு மட்டும் 250 ரூபாய் கொடுக்கிறோம். அதனால்தான் இந்த வித்தியாசம். மொத்தத்திலே பார்க்கிற போது, ஏறத்தாழ இரண்டு பேர்களுக்கும் ஒன்றாகக் கிடைக்கிறது.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசிலே இலவச ரயில் பாஸ் வழங்கியிருக்கிறார்கள். அதைப் போல், நம்முடைய தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங் களிலும் அந்தத் தியாகிகள் பயணம் செய்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்க தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வெவ்வேறு வகையிலே அவர்களுக்கு இந்த அரசாங்கம் சலுகைகளை அதிகரித்துக்கொண்டு போகிறது. குறிப்பாக அவர்களுக்கு வருமான வரம்பு என்று ஒரு நிர்ணயம் வைத்திருந்தது. அதை இப்போது எடுத்துவிட்டோம். மிகவும் குறைவாக இருந்தது. ஏறத்தாழ 50 ரூபாய் என்று இருந்ததை மாற்றி தற்போது 250 ரூபாய் என்று மாற்றியிருக்கிறோம். எனவே ஏதாவது ஒரு வகையிலே அவர்களுக்கு சலுகைகளை ஏற்படுத்திக்கொண்டு போவது கூட அவர்களுக்கு வசதியாக இருக்கும். சில பேர்களுக்கு பஸ் பாஸ் பயனில்லாமல் போய்விடக் கூடும். எனவே பஸ் பாஸ்களுக்கு பதிலாகத்தான் இந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன என்று கூட நான் கருதுகிறேன். சில பேர்கள் வயதானவர்களாக இருப்பார்கள். அவர்கள் பஸ் பாசை பயன்படுத்த முடியாது. எனவே இதிலே பாரபட்சம் கூட வந்து விடலாம். எனவே இந்த முறைதான் சரியானதாக இருக்கும். இதிலே அவசியம் இருந்தால், எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்கலாம்.

மோட்டார் வாகனங்களுக்கு காலக்கெடு.

447—(* வினா எண் 9165) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்களை தடை செய்யும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தை எடுத்துக்கொண்டால், விபத்துக்களில் இறப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த